உஉ௩உ௩௮

ஹோமியோ பிரகடனம்

Dec 1959

JL
Km211, N59
N59
223238

மூன்று கைகண்ட மருந்துகள் :

உங்கள் மருந்து ஸ்டாலில் இருக்கவேண்டியவை

**Dr. சீனிவாசனின்**

அற்புத தயாரிப்புகள்.

**ஓடோலின்**

காதுவலி, குத்தல், சீழ்வடிதல், முதலிய எல்லா காது வியாதிகளுக்கும் சிறந்த மருந்து.

1 Oz. பெட்டி விலை ரூபாய் 1-00

**டென்டோலின்**

பல்வலி, பல்சொத்தை, பயோரியா, ஆடும் பற்கள் முதலியவைகளுக்கு கைகண்ட மருந்து.

1 Oz. பெட்டி விலை ரூபாய் 1-00

223238

**இடோன்**

கண்சிவப்பு, நீர்வடிதல், மாலைக் கண், முதலியவற்றிற்கு நிகரற்றது.

பெட்டி டிராப்பருடன் ரு. 2-00

# சந்தா நேயர்களுக்கு வேண்டுகோள்.

உங்கள் ஆதரவையும், அன்பையும் பெற்றே இம்மாத பிரகடனம் வெளியிடப்படுகிறது. உங்களுக்கும் ஹோமியோபதிக்கும் தொடர்ந்து, பயன்படத்தக்க முறையில் சேவை செய்வதற்கு உங்கள் ஆதரவு பரிபூரணமாக தேவை.

உங்கள் சந்தாத் தொகையை தவறாமல் அனுப்புவதுடன், உங்கள் நண்பர்கள் அனைவரையும் இதன் சந்தாதாரராகச் சேர்ப்பித்து வைக்கவும்.

தமிழ் நாட்டிலேயே சிறந்த முறையில் உங்களுக்குப் பணியாற்ற நீங்கள் ஒத்துழைப்பது மிக அவசியமாகிறது.

ஆசிரியர்.

## உங்கள் அறிவையும், அனுபவத்தையும்
## வளரச்செய்யும்
# ஹோமியோ பிரகடனத்தின்
## சந்தாதாரராக
## நீங்கள் சேர்ந்துவிட்டீர்களா ?

இல்லையென்றால் உடனே கீழ்க்கண்ட பாரத்தை பூர்த்திசெய்து உடனே ரூ. 3/- வருஷ சந்தாவை அனுப்பிவையுங்கள்.

**தென்னிந்தியாவிலேயே சிறந்ததொரு மாதப் பிரகடனம் இதுதான்.**

ரெ.

தேதி..................

பெயர்..........................................................

முழு விலாசமும், தொழிலும் } ..........................................

சந்தாத்தொகை..............................ம். ஆ. ரெ...........


டிசம்பர் 1959.

# பொருளடக்கம்.


பிட்யூட்டரி (தொடர்ச்சி)-1

டாக்டர்களுக்கு எச்சரிக்கை-5

'கன்வென்ஷன்'-8

வட்டாரச்செய்திகள்-9

கணைச்சூடு-17

DIARRHOEA—21

புதுமருந்துகள்-26. முதலியன.

# VALINIL

## (வலிநில்)

### (ஹோமியோ தலைவலி மாத்திரை)

வெகு நாட்களின் ஆராய்ச்சியின் பயனாக நமது லாபரட்டரியில் தலைவலிக்கென்றே ஸ்பெஷலாக தயார் செய்யப்பட்டுள்ளது. இதில் ஹிருதயத்தைப் பாதிக்கக்கூடிய எந்த மருந்துகளும் கலப்பில்லாதது, (இதில் கொய்னா ஸல்ப், ஆஸ்பரின், காபின், பெனாசிடின் முதலானவைகள் சேர்க்கப்பட்டதல்ல) தலைவலி, ஜுரம், ஜலதோஷம், உடம்பில் எல்லா பாகத்திலும் வலி, முதலியவற்றை உடனே நிவர்த்தி செய்யும்.

**ஹானிமான் ஹோமியோ இன்ஸ்டிட்யூட்,**
**தபால் பெட்டி நெ. 19,**
**திருவாரூர்.**




## பிட்யூட்டரி தொடர்பு.

ஆகவே இந்த முதல் சத்தின் பிரகாரம் உண்டாகும் குறிகளைக்கொண்டு கீழ்கண்ட குறிகளுக்கு உபயோகிக்கலாம். இசிவுடன் கூடிய இருதயவலி. தோல் வெளுத்திருப்பது, முதலில் நாடி தளர்ந்து, பிறகு வேகமாக துடிப்பது, ரத்த அமுக்கம் மாறுபடுவது, சிறுநீர் குறைவது இவைகள் குணப்படும் வியாதிகளாகும்.

கல்கத்தாவில் ஒரு பிரபல டாக்டர் 30 வீரியத்தில் இம்மருந்தை உபயோகப்படுத்திய இரண்டு கேசுகளை உதாரணமாகச் சொல்வோம்.

இருதயத்தின் ரத்தக்குழாயில் ரத்தம்கட்டி அதனால் ரத்தம் சரிவர ஓடுவது தடைப்படுவது. இவ்வியாதி ரொம்பவும் ஆபத்தானது. இந்த மனிதனுக்கு வயது 61. 1½ வருடகாலமாக இவ்வியாதியால் அவதிப் பட்டுகொண்டிருந்தார். ஒரு நாள் திடீரென இரவு 11-மணிக்கு கடுமையான மூச்சுத்திணறலுடன். நெஞ்சில் களகள் என்ற சப்தத்துடன், இருதயத்தில் தாங்கமுடியாத வலியுடன் அவதிப்பட்டார். நுரையீரல்கள் சுபந்து வீங்கியிருக்கும் என்று தோன்றிற்று. நாடி மிருதுவாகவும், நிதானமாகவும் இருந்தது. ரத்த அமுக்கம் குறைந்திருந்தது. அரைமணி நேரத்திற்கு ஒரு தடவை பிட்யூட்டரின் 30 வீரியத்தில் கொடுக்கப்பட்டது. இது வலியைமுழுவதும் நிறுத்திவிட்டது. மூச்சுத்திணறலும் குறைந்துவிட்டது. ரத்தம் கலந்த கோழை வாந்தி எடுக்கப்பட்டது. இதற்காக ஒருடோஸ் மார்குரி சல்ப் கொடுக்கப்பட்டது. பிறகு தைராயிடின் 200 மூச்சுத்திணறல் நிற்பதற்காக சில டோஸ்கள் கொடுக்கப்பட்டது.

45 வயது: ஆண். இரண்டு வருடகால்மாக இவருக்கு மதுமேகம். சிறிது தேகபரிசிரமம் ஏற்பட்டால்

லேசான இருதயதலி வந்துகொண்டிருந்தது. இரத்தக் கொதிப்பும், நாடியும் சாதாரணமாக இருந்தது. அவர் இருதயத்தில் கெடுதல் இருப்பதாக ஈ. சி. கிராப் காண்பித்தது. இவருக்கும் வாரம் மூன்று முறை பிட்யூட்டரின் 30 பதினைந்து நாட்களுக்கு கொடுக்கப்பட்டது. இதற்குப் பிறகு ஒருவித தொந்திரவுமில்லாமல் தாராளமாக நடக்க ஆரம்பித்து விட்டார்.

இருதயத்தின் கோளாறினால் ஏற்படும் நரம்பு வலிகளுக்கும் இம்மருந்து பிரயோஜனப்படும். வயிற்றுக்கோளாறுகளின் காற்று ஒப்புசத்தினல் ஏற்படும் இருதயபாகத்தில் ஏற்படும் வலிகளுக்கு பிரயோசனப்படாது.

ஆக்ஸிடோசின்-ஈஸ்ட்ரோஜன் என்ற பெண்ஹார்மோனிலும், கார்பஸ்லூட்டியம் என்பதிலும இச்சத்து தீவிரமாக வேலைசெய்கிறது. தாமதித்த ருதுவாகுவதும், தனம் சரியாகவளர்ச்சியுராததும் இதனல் நிவர்த்திக்கப்படும். ஆனல் பிட்யூட்டரின் வீரியப்படுத்தி உபயோகப்படுத்தவேண்டும். பெண்ஹார்மோன் சத்தை அப்படியே எடுத்துக்கொடுப்பதைகாட்டிலும் வீரியப்படுத்தப்பட்ட பிட்யூட்டரின் நிச்சயமான பலனை அளிக்கவல்லது. கார்பஸ்லூட்டியத்திற்கு பாதகமான பலனைக்கொடுக்கக்கூடியது பெண்ஹார்மோன் சத்து. ஆகவே கர்ப்ப காலத்து பின் மாதங்களில் கார்பஸ்லூட்டியம் வீணகிவிடும்போது பிட்யூட்டரின் கருவடைந்த கருப்பப்பையில் பிரமாதமாக வேலைசெய்யும். வீரியப்படுத்தப்பட்டால் பிட்யூட்டரின் கார்பஸ்லூட்டியம் சரியானபடி வேலை செய்ய ஏற்பாடு செய்கிறது. ஆகவே சினைமயங்களில் மலட்டுத் தன்மையையும், ஆமபக் கருச்சிதைவையையும் குணப்படுத்தப்படுகிறது.



முதல் பிரசவம் ரொம்பவும் சிரமமாக இருந்தது. அதற்கு பிறகு இந்த பெண்மணி வரவர மாதவிடாய் குறைந்தும், அடிவயிற்றில் தொந்திவிழுந்தும், தலைமயிர் நரைத்தும் இவ்வாறு இரண்டு, மூன்று வருடங்கள் நீடித்து. அந்த அம்மாளுக்கு முதலில் "பரைட்டாகார்ப் " 200 ஒரு டோஸ் கொடுத்த பிறகு முதலில் வாரம் இருமுறை, பிறகு ரம் ஒரு முறை, ஒரு வருடகாலம் பிட்யூட்டரின் டுக்கப்பட்டது. பிறகு தாராளமாக மாதவிடாய் ஏற் பிறகு ஒரு முழுக்குழந்தையும் பிரசவித்து எடுத்தாள் ன் நரையும் பெரும் பாலும் குணமாகிவிட்டது.

ாதவிடாயின் போது ரொம்ப வலி எடுத்தால். பிட டரின் குறைந்த போடன்ஸியில் நன்றாக வேலை செ

ல் பூட்டரின் குடலின் தசை இயக்கத்தின் கோளாறி ம் குடல்வலியை சுலபமாகப் போக்கிவிடும். இம் மா குறிகளின் பிரத்தியேக குணங்களை அறிவது அசாத்தியம். இதன்வலி நக்ஸ்வாமிகா, கோலோசிந்த் போல இருக்கும். வலி கடுமையாக விட்டு விட்டு பிசைவதுபோல் இருந்தாலும் பிட்யூட்டரின் 30 வீரியத்தில் நன்றாக வேலை செய்யும்.

நாள்பட்ட குடல் வீக்கத்திற்கும் சிறந்தது. குடல் அதற்குள்ளேயே சொருகிக்கொண்டு ஏற்படும் மந்தமான நாடி இருந்தால் பெரும்பாலான கேசுகளில் அறுவை வைத்தியம் செய்யாமலே குணப்படுத்தி விடலாம்.

அதேமாதிரி மூத்திரக்காய்களின் வலியிலும் இது சிறந்தது.

கடுமையான குடல் வலியினல் நோயாளி பிரண்டு துன்பப்படும்போது பிட்யூட்டரின் ஒரு கைகண்ட மருந்தாகும். ஆனல் இருதயதுடிப்பு மெதுவாக இருக்க வேண்டும். பிட்யூட்டரின் கண்களிலும் பிரமாதமாக வேலை செய்யும். கண்களில் புண்கள், கார்னியாவில் புண் ஏற்படுவது இவை இரண்டும் வீரியப்படுத்தப்பட்ட பிட்யூட்டரின்

கொடுத்தால் வெகுசீக்கிரத்தில் குணமடையும். உதாரண கேசுகள் அநேகம் கொடுக்கலாம்.

பெண். வயது : 18.

மாதவிடாயே ஏற்படவில்லை தனங்கள் வளர வில்லை. வளர்ச்சியுறாத அவளது கருப்பைகளுக்கும்சினைப்பைகளுக்கும் ஆங்கில வைத்தியர்கள் தைராயிடு, பெண் ஹார்மோன்ச ஏராளமாக கொடுத்தனர். ஆனால் பலன் இல்லை. பெண்ணிற்கு பிட்யூட்டரி 30 முதலிரண்டு வாரம் முறையும், பிறகு வாரம் இருமுறையும் கொடுக்க வந்தது. நான்கு மாதம் கழித்து தனங்கள் வளர்ச்சி ஆறுமாதத்திற்கு பின்பு நன்றாக வளர்ச்சியுற்ற யாகி மாதவிடாயும் ஒழுங்காக வந்தது.

இம்மாதிரியான அநேககேசுகள் சொல்லல ஆகவே பிட்யூட்டரினை முக்கியமாக கீழ்க்கண்ட வி ளுக்கும் வீரியப்படுத்தி உபயோகிக்க வேண்டுமென்று ஹோமியோபதி டாக்டர்களும் அறிந்து கொள்வது அவ்சியம்.

1. வயதானவர்களுக்கு ஏற்படும் இருதயவலி.

2. நாள்பட்ட குடல்வலி, குடல் தசை இயக்கக் கோளாறுகள்.

3. குடல் ஒன்றுக்குள் ஒன்று சொருகிக்கொள்வதால் குழந்தைகளுக்கும் வயதானவர்களுக்கும்வயிற்று வலி.

4. சிலசமயங்களில் குடல் நெருக்கப்பட்டால் இது உபயோகப்படும்

5. மூத்திரக்காய், பித்தப்பை வலி.

6. மாதவிடாயின் போது கடுமையான வயிற்றுவலி, ரொம்ப பின்தங்கி ருதுவாதலும், தடைப்பட்ட வளர்ச்சி, தனங்களின் வளர்ச்சிக் குறைவும் குணமாகும்.

7. மலட்டு ஸ்திரிகளின் கார்பஸ்லூட்டியத்தை சரிவர இயங்கச் செய்து உடல் வளர்ச்சியை சரிசெய்யும், கர்ப்பம் ஏற்படச்செய்யும்.

8. கார்னியா, வெள்ளை விழி முதலான இடங்களில் உண்டாகும் புண்கள் நிவர்த்தியாகும்.



# ஹோமியோபதி டாக்டர்களுக்கு ஒரு எச்சரிக்கை.

## "செய்தி"

☆

ஸ்ரீ V. D. திருப்பதி லோகசபையின் ஒரு அங்கத்தினர் பென்சிலின் இன்ஜெக்ஷன் போடப்பட்ட உடனேயே மரண மடைந்தார்.

லோக சபையில் இவர் 18-11-59 அன்று பெனிசிலின் ஊசிபோட்டு மரணமடைந்த பிறகு விவாதம் எழுந்தது. சுகாதார மந்திரி கர்மார்க்கர் அவர்கள் இதற்குப் பதிலளிக்கையில் சர்க்கார் ஆஸ்பத்திரி சகல டாக்டர்களையும் பென்சிலின் கொடுக்கும்போது யோசித்துப்பார்த்து, நிதானித்துக் கொடுக்கவேண்டும் என்று சர்க்கார் வலியுறுத்துகிறது என்று பதிலளித்தார்.

நாம் ஏற்கனவே ஜப்பான் தேசத்தில் கண்டபடி பென்சிலின் இன்ஜெக்ஷன் செய்தால் ஏற்பட்ட நூற்றுக்கணக்கான மரணங்களைப்பற்றியும் அமெரிக்காவிலும் நூற்றுக்கணக்கானவர்களுக்கு இந்த இன்ஜெக்ஷன் செய்ததால் ஏற்பட்ட மரணத்தைப்பற்றியும் ஏற்கனவே பத்திரிக்கையில் எழுதியிருந்தோம்.

தற்காலம் நாட்டின் மூலை முடுக்குகளில் அநேக அரைகுறை ஹோமியோபதியர்களும், ஹோமியோபதி போர்டை மாட்டிக்கொண்டு அந்த சாக்கில் கடையிலிருந்து ஆங்கில மருந்தை வாங்கி உபயோகப்படுத்துபவர்களும் நிறைய

இருக்கின்றனர். இவர்களுக்கு ஹோமியோபதி வைத்தியமும் முழுக்கத்தெரியாது. இம்மாதிரி சிலர் விஷத் தன்மையுள்ள பென்சிலின் முதலிய மருந்துகளைக் கண்டவாறு உபயோகப் படுத்துவது மக்களுக்கு தீங்கிழைப்பதாகும். ஹோமியோபதி மருந்துகளைத் தவிர, அலபதி மருந்துகளை அலபதி பட்டம் பெறாத ஹோமியோபதி போர்வைக்குள் மறைந்திருந்து உபயோகிப்பவர்களை பொதுமக்களின் நன்மைக்காகவேனும் உதாசீனம் செய்ய வேண்டுவது அவசியமாகிறது.

ஹோமியோபதி ஒரு பூரணமானதுறை. இதில் மற்ற எந்த மருந்துகளின் கலப்பிற்கும் அவசியமில்லை. சுத்தமான ஹோமியோபதி மருந்துகளையே கையாண்டு திறமையுள்ள யாரும் எல்லா வியாதிகளையும் குணப்படுத்தலாம். இதைப் பற்றி நமது டைரக்டர் அடிக்கடிக் கூறிக்கொண்டு வந்திருக்கிறார் என்பதை நீங்களெல்லோரும் அறிந்ததே.

ஆராய்ச்சி என்று சொல்லிக்கொண்டும் ஹோமியோபதி மருந்துகளோடு வேறு எந்த மருந்துகளையும் கலக்கக்கூடாது. ஹோமியோபதி மருந்து கொடுக்கும் முறையும் மற்ற முறைகளும் நேர் எதிர்மாறானவை. இதைப்பற்றிச் சர்ச்சை எழுந்தபோது ஏற்கனவே நாம் கூறி இருக்கிறோம். சில ஸ்தாபனங்களில் ஹோமியோபதி மருந்துகளுடன் கூட ஆராய்ச்சி என்று சொல்லிக்கொண்டு அலபதி மருந்துகளைக் கலப்பது வழக்கமாய் இருக்கிறது. உதாரணமாக ஹோமியோபதி மருந்துடன் அலபதி வைட்டமின்களைச் சேர்த்துக் கொடுப்பது. நாங்களும் அம்மாதிரிக் கலப்படம் செய்ய வேண்டியிருக்கிறது. 'தப்பினும் தப்பிதந்தான்'.

வைட்டமின்கள் செயற்கை முறையில் தயாரிக்கப்பட்டு ஆகாரமாகவோ, மருந்தாகவோ உட்கொள்ளுவது மிகவு மதியீனம் என்று நாம் வலியுறுத்தி வந்திருக்கிறோம். அ



பதியர்களின் ஆராய்ச்சி மனப்பான்மை கோணலான வழியிலேயே சென்று கொண்டிருக்கிறது. வியாதிக்குக் காரணம் உடலில் ஏதாவது குறையிருந்துக்கொண்டே இருப்பது தான் என்று அலோபதியர்கள் பிதற்றுகிறார்கள். அல்லது வியாதிகளெல்லாம் ஏதாவது கிருமிகளோ அல்லது வைரசாலோ என்று பிதற்றுகிறார்கள். இம்மாதிரி அலோபதி வைத்தியர்களுக்குத்தான் அதாவது ஸ்தூல அளவில் அதிகமாக மருந்து கொடுப்பவர்களுக்குத்தான் வைட்டமின் தேவை.

வைட்டமின் 'C' தேவை என்றால் நெல்லிக்காயோ, கொய்யாக்காயோ அல்லது இலந்தைக்காயோ சாப்பிடுவது மிகவும் நல்லது. வைட்டமின் 'B' தேவை என்றால் சிறு முளைவிட்ட தான்ய வகைகளைச் சாப்பிடுவது மிகச்சிறந்தது. இம்மாதிரி தானியங்களிலிருந்தும், பச்சைப்பொருள்களிலிருந்தும், நம் சரீரம் வைட்டமின்களைத் தேவைக்குத் தகுந்த மாதிரி தயாரித்துக்கொள்ளும் சக்தி வாய்ந்தது.

ஆகவே ஹோமியோபதியைக் கையாளுபவர்கள் எக்காரணத்தைக்கொண்டும் மற்ற மருந்துகளைக் கலக்காமல் ஹோமியோபதி மருந்துகளையே கையாளவேண்டும் என்று நாம் வற்புறுத்துகிறோம். ஹோமியோபதி வைத்தியம் செய்கிறோம் என்று அலபதி மருந்துகளைக் கையாளவேண்டாம் என்றும் வற்புறுத்துகிறோம்.

## ஹோமியோபதி டாக்டர்களின் ஒற்றுமையைக்காட்ட சந்தர்ப்பம்.

சென்னையில் 27—12—59 அன்று
ஹோமியோபதி டாக்டர்களே,

### அன்பர்களே திரண்டு வாருங்கள்.

ஹோமியோபதி வைத்தியத்தின் சிறப்பை மக்களுக்கு எடுத்துக்காட்டவும், ஹோமியோபதியர்களின் குறையைத் தீர்க்கவழிக்காணவும், ஹோமியோபதி வைத்தியர்களுக்கு பதவியும், அந்தஸ்தும் பெற திட்டங்கள் திட்டவும்

இது ஒரு சந்தர்ப்பம்!

எனவே

மூலை முடுக்குகளில் உள்ள சகல ஹோமியோபதியர் களும் திரண்டு வந்து இம்மகாநாட்டைச் சிறப்பிக்க வேண்டியது உங்கள் கடமைகளில் ஒன்றாகும்.

27—12—59 சென்னை "மறக்காதீர்கள்"

விவரங்களுக்கு :-

காரியதரிசி,

சென்னை ராஜ்ய ரிஜிஸ்டர்ட் ஹோமியோபதி
அசோஷியேஷன்கள் கூட்டணி,
26, பாண்டிய வேளாளர் தெரு,
மதுரை.



## வட்டார செய்தி.

தென்காசி தாலுக்கா
பதிவுபெற்ற ஹோமியோ டாக்டர்கள் சங்கம்
தென்காசி.

22—11—59 அன்று இச்சங்கத்தின் 4-வது கூட்டம் திருவள்ளுவர் கழகத்தில் நடைபெற்றது. டாக்டர் V. M. ரிஸவ்முகம்மது அவர்கள் தலைமை வகித்தார்கள்.

கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேறியது.

1. B. R. சந்திரன் அவர்களை செயலாளர் பதவியி லிருந்து நீக்கிவிடுவதே நியாயமாகும். அதைவிடுத்து அவ ரையே ஜில்லா சங்கத்திற்கு செயலாளராக நியமித் திருப்பது நியாமற்ற செயலாகும் எனவே நமது தென்காசி தாலுக்கா சங்கம் திருநெல்வேலி ஜில்லா சங்கத்திலிருந்து விலகிவிடுவதென்று தீர்மானிக்கப்பட்டது.

2. திருநெல்வேலி சங்கப் பெயரால் கையெழுத்திடாத அறிக்கைகளை ரிகார்டு செய்யாமல் தள்ளபட்டது.

3. மேற்படி தீர்மானங்கள் நிறைவேறியபின் நமது சங்கத்தை மாகாண கூட்டணியில் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## மதராஸ் ராஜ்ய பெடரேஷன்
## பதிவுபெற்ற ஹோமியோபதி டாக்டர்கள்
## சங்கங்களின் கூட்டணி
## திண்டிவனம்-கிளை.

8—11—59 அன்று இச்சங்க கூட்டம் நடைபெற்றது. அவ்வமயம் கிழ்கண்ட தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டது.

1. எல்லா சங்கங்களுக்கும் பெடரேஷன் மூலம் சுற்றரிக்கைவிட்டு பெடரேஷன்கிளை ஸ்தாபனமாக நிகழ்வதா, கூடாதா என்பதற்கு தீர்மானம் கொண்டு வந்து எங்கள் சங்கத்திற்கு அனுப்பிவைக்கும்படி கேட்டுகொள்ளப் படுகிறது.

2. பதிவு செய்யப்படாதவர்களுக்கு வோட்டு உரிமை இல்லையென்றும் பதிவுபெற்ற பிறகு அவர்களுக்கு ஓட்டுரிமையுண்டு என்று தீர்மானிக்கப்பட்டது.

3. சங்கத்தின் ஆலோசகராக டாக்டர் ஸ்ரீ சங்கர் ராவ் கோபிகர் அவர்களை நியமிக்கப்பட்டது.

4. சங்கத்திற்கு மாதப்பத்திரிக்கை அனுப்பும் ஸ்தாபனங்களுக்கு நன்றி செலுத்திக்கொண்டு அனுப்பாத ஸ்தாபனங்களை கேட்டுக்கொள்ளுகிறது.



## அகில தமிழ் நாட்டு
## ஹோமியோபதி வைத்தியர்கள் சங்கம்.
## திருச்சிராப்பள்ளி.

இச்சங்கத்தின் மாதாந்திரக்கூட்டம் 22-11-59 அன்று J. S. ராமானுஜ அனந்தர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

டாக்டர் G.A B சார் அவர்களும் டாக்டர் M.B. முத்துராமய்யர் அவர்களும் "ரத்தஅழுத்தத்திற்கான" ஹோமியோபதி சிகிச்சையைப்பற்றி விரிவாகபேசினார்கள். V. மகாதேவன் அவர்கள் இவ்வியாதியுள்ள நோயாளிகளை எவ்வாறு பரிசோதனை செய்வது என்பதைப்பற்றியும் பேசினார்கள்.

## நிலகிரி ஜில்லா ரிஜிஸ்டர்ட்
## ஹோமியோபதிக் மெடிகல் பிராக்டிஷனர்ஸ்
## அசோஸியேஷன்-கோத்தகிரி.

30—10—59 அன்று J. மேதா கவுண்டர் அவர்கள் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

மேதா அவர்கள் பேசும் பொழுது கிராமவாசிகளுக்கு ஹோமியோபதி மருந்துகள் 80-90% வரை நல்ல பலனை அளிப்பதால் இதை ஹோமியோபதி டாக்டர்கள் மனதில் வைத்துக்கொண்டு கிராமவாசிகளுக்கு சிறந்த முறையில் வைத்தியம் செய்யவேண்டுமென்று கூறினார். மேலும் சிலர் பேசினார்கள்.

## வடசேலம் பதிவுபெற்ற ஹோமியோபதி மருத்துவச்சங்கம்.

---

வடசேலம் ஹோமியோ சங்கம் அ. ஞானப்பிரகாசம் தலைமையில் நடைபெற்றது. ஓசூர் சுந்திரம் அவர்கள் நக்ஸ்வாமிகாவின் வரலாறுபற்றியும் டாக்டர் திருவேங்கிடம் தீபாவளி வாழ்த்துக்களைப்பற்றியும் பேசினார்கள். மேலும் டாக்டர் கண்ணப்பகவுண்டர், டாக்டர் வேலன், அ. ஞானப்பிரகாசம் முதலியவர்களும் பேசினார்கள்.

---

## ஐக்கிய பதிவு பெற்ற ஹோமியோபதி டாக்டர்கள் சங்கம் மதுரை.

---

ஐக்கிய பதிவுபெற்ற ஹோமியோபதி டாக்டர்கள் சங்கத்தின் விசேஷக்கூட்டம் 29—11—59 கூடிற்று. டாக்டர் R. பலராமன் அவர்கள் தலைமை வகித்தார்கள். டாக்டர் D. S. சாந்தாராஜ் அவர்கள் "வயிற்றுவலியும், சிகிச்சையும்" என்பதைப்பற்றியும், டாக்டர் அஜீஸ்கான் "இருதயமும் அதனுடைய இயக்கமும்" என்பதைப்பற்றியும், டாக்டர் M. கோபாலகிருஷ்ணன் அவர்கள் 27—12—59 அன்று சென்னையில் நடக்கவிருக்கும் கூட்டம் மிகவும் முக்கியமானது என்றும், அதில் எல்லா ஹோமியோபதியர்களும் கலந்துகொள்ள வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்கள்.

நன்றி கூறுதலுடன் கூட்டம் முடிவுபெற்றது.

---



## பாராட்டுரை.

அரும்பு மலர்கிறது. Dr. S. N. சண்முகம்.

## வாழ்க திருவாரூர் 'ஹோமியோ பிரகடனம்'!

---

கடந்த சிலவருடங்களாக தூங்கிக்கிடந்த ஹோமியோபதி இன்று விழித்துவிட்டது. இச்செய்திகேட்டு தமிழ்நாட்டு ஹோமியோபதியர்கள் அனைவரும் பட்டற்ற மகிழ்ச்சிதான் அடைந்துள்ளோம். ஆயினும் ஒரு குறைதான் ஒரு பவுண்டு மருந்தாகிலும் வைத்துக்கொள்ள வழி செய்தால்தான் குறை தீர்ந்தது என்று சொல்ல முடியும். அரசாங்கம் அங்கீகரித்து விட்டது. ஆகையால் கூட்டணி சங்கத்தின் மூலம் நம்முடைய குறைகளையும் நல்ல முறைகளையும் எடுத்துச் சொல்லவேண்டும். ஹோமியோ வைத்தியர் என்று பட்டம் சூட்டிக்கொண்டு ஹோமியோபதி மருந்துகளை கண்கொண்டு பாராதவர் இருந்து வருவதாலும். ஹோமியோ ஸ்தாபனங்கள் உண்மையான முறையிலே மருந்துகளை தயாரித்து கொடுக்காததாலும் குருடன் குறை கூறுவதுபோல் இருந்துவருகிறது. பச்சிலை எடுத்தரியாத பண்டிதரை நாட்டு வைத்தியர்கள் என்று ரிஜிஸ்டர் செய்து கொடுத்தார்களே அவர்களைவிட நாம் என்ன அறிவிழந்தா விட்டோம். ஒளி குன்றிய நமக்கு உதயசூரியன்போல் ஆங்காங்கு நம்சங்கங்கள் அமைந்துவிட்டது. தமிழ் நாட்டு ஹோமியோபதியர்களின் வாழ்விலே புதுமைகாண நமது சங்கத்தின் மூலம் ஆட்சியாளருக்கு எடுத்துச்சொல்ல எல்லா ஹோமியோபதியர்களும் ஒன்று சேர்ந்தால் மது உண்டவனைப்போல் மயங்கிக்கிடக்கும் காரியச் செவிடாயுள்ள சர்க்கார் செவிசாய்த்தே ஆகவேண்டும். நோய் நாடி நோய் முதல் நாடியது தணிக்கும் வாய்நாடி வாய்ப்பச்செயல் என்று வள்ளுவர் பொன்மொழிபோல் விஞ்ஞானப்பாதையிலே மாற்று நடை போட்டுவரும் உங்கள் தொண்டு ஹோமியோடாக்டர்கள் வாழ்வு மலர ஹோமியோ பிரகடனம் பத்திரிகை மிகவும் போற்றத்தக்கது.

வளர்க ஹோமியோபதி – வாழ்க ஹோமியோ பிரகடனப்.

# அனுபவ கேஸ்.

---

Dr V. மாரியப்பன்,
மேலப்பெருமழை.

பெயர் : சாவித்திரி.
வயது : 17.
ஊர் : தொண்டிக்காடு.

இப்பெண்ணிற்கு 3 மாதமாக இருமல் ஏற்பட்டு குணம் ஆகாமல் எத்தனையோ அல்லோபதி டாக்டர்களிடம் காட்டியும் இன்ஜெக்ஷன் செய்தும் குணமாகாமல் என்னிடம் வந்தார்கள். நான் தங்கள் ஸ்பெஷல் தயாரிப்பான 'எபடால்' என்ற சிரப்பைக்கொடுத்து இம்மருந்தை வேளைக்கு ஒரு டீஸ்பூன் வீதம் ஒரு நாளைக்கு 3 வேளையாக 5 நாட்களுக்கு கொடுத்தால் போதும் என்றேன். ஐந்து நாட்களுக்கு கொடுத்து விட்டு 6-வது நாள் வந்து சார் என்குழந்தைக்கு சௌகரியமாகிவிட்டது என்றும், இம்மருந்துகள் எல்லாம் அமெரிக்காவிலிருந்து வரவழைக்கப்பட்டதா? இவ்வளவு சீக்கிரம் குணமாகிவிட்டதே என்று கேட்டார். அமெரிக்காவிலிருந்து வரவில்லை. நமது ஊருக்கு பக்கத்தில் உள்ள ஆரூரில்தான் தயாரிக்கப்பட்டது என்று சொன்னேன். எல்லோரும் ஆச்சரியமடைந்தனர். தங்கள் ஆச்சரியப்படும் படியான ஸ்பெஷல் தயாரிப்புக்கு நான் என்றும் கடமைப் பட்டவனாக ஆகிவிட்டேன். வளர்க ஹோமியோபதி!



டாக்டர் G. K. S. சிவம்,
அம்பூர்.

பெயர் : துரைசாமி செட்டி,
வயது : 24.
ஊர் : குமாரமங்கலம்.

30—8—59 தேதி மாலை 3-மணிக்கு நமது ஆஸ்பத்திரிக்கு ஷை நபரை கொண்டுவந்தார்கள். அவரது நிலைமை கவலைக்கிடமான நிலையில் பற்கள்கிட்டி தண்ணீர்கூட இரங்கவில்லை. மருந்து வாய்வழியே கொடுக்கமுடியவில்லை. மற்ற குறிகள். உடல் முழுவதும் வீக்கம். மூடியகண்கள் 104·4 டிகிரி சுரம். வலிப்பு. சிலவருடங்களாக மேக நோயால் பீடிக்கப்பட்டிருந்தார். வழியில் வண்டியில் மூன்று மைல் தூரம் வருவதற்குள் நான்குதரம் வலிப்பு வந்ததாம். நான் பார்த்ததில் நீர் சரியாக பிரியவில்லையென்பது தெரிந்தது. தவிர பேசிக்கொண்டிருக்கும்போதே வலிப்பு வந்துவிட்டது. ஒரு பெரியசத்தம் போட்டுக்கொண்டு கிடுகிடுவென்று வந்தது. பெல்லடோனா 200ல் ஊசி போட்டேன். முதலில் எனக்கு நம்பிக்கையில்லை. இருந்தாலும் முயற்சித்து பார்க்கிறேன் என்று அவர்களிடம் சொன்னேன். அவர்களும் நம்பிக்கையிழந்துவிட்டார்கள். முதல் ஊசி போட்டு 1-மணி நேரம் வரை வலிப்பு வரவில்லை. வாய்வழியும் லேசாக திறந்தது. எக்கினேஷியா தாய்திராவகம் பதினைந்து சொட்டுகள் ஒரு அவுன்ஸ் தண்ணீரில் கலந்து வாய் மூலம் கொடுக்கப்பட்டது. ஒரு மணிநேரம் மயக்கமாக கண்மூடியபடியே இருந்தது. மறுபடியும் மருந்து என்று பார்லிகஞ்சி கொடுக்க முயற்சித்த போது கையால் தட்டி விட்டார். எனக்கு பிறகுதான் நம்பிக்கைவந்தது. நமது மருந்து வேலை செய்ய ஆரம்பித்து

விட்டது என்ற திடமான நம்பிக்கை ஏற்பட்டது. பின் அவர்கள் இங்கேயே 30 நாட்கள் தங்கி போவதாக ஞர்கள். ஸ்ட்ராமோனியம் 200ல் ஒரு ஊசி போட்டே இரவில் நல்ல தூக்கம் ஏற்பட்டது. வீக்கம் பாதி குறைர் பின்குறிகளுக்குத் தக்கவாறு சிகிச்சை செய்து 30 நாட் சொன்ன நான் 22 நாட்களிலேயே பூரண குணமடைந்ர ா,

---

T. K. அருணாசலம்,
குருசாமிப்பாளையம். 20—11

அன்புடையீர் தங்களின் ஹோமிசிலின் மரு உபயோகித்ததில் ஆச்சரியப்படத்தக்க முறையில் ( தெரிந்தது. அதாவது என்னிடம் இரவு 11-மணிக்கு சி கவுண்டர் என்பவர் கடலேக்காய் கலத்தில் பன்றி கடித்து வலதுகையில் 5 பல் இறங்கி காயத்துடன் வந்தார். அவருக்கு அந்த நேரம் முதல் உதவி முறையில் வைத்தியம் செய்து அனுப்பிவிட்டு மறுநாள் காலேயில் வரச்சொன்னேன். மறு நாள் காலேயில் அவர்கை வீங்கி அவருக்கு சுரம், குளிர் நடுக்கத்துடன் வந்தார். உடனே அவர்கைக்கு பேண்டேஜ் போட்டுவிட்டு ஹோமிசிலின் இன்ஜெக்ஷன் ஒன்று செய்தேன். மறுநாள் காலே வீக்கம் குறைந்து வலி நின்று விட்டது. அன்றும் ஒரு ஊசி குத்திவிட்டேன். அவருக்கு இதனுல் வியக்கத்தக்க பூரண குணம் ஏற்பட்டு விட்டது. மீண்டும் அவர் வேலேக்கு போய் வருகிருர். நான் அவருக்கு வைத்தியம் செய்யவில்லே, பூரணகுணமடைந்து விட்டார். ஹோமிசிலின் உபயோகித்தால் அல்லோபதி A. T. S. போடத்தேவையில்லே.

---



# கணேச்சூடு - RICKETS.

---

Dr K. M. A. வஹாப்.

இது குழந்தைகளின் வியாதியாகும். குழந்தை நடக்க ஆரம்பிக்குமுன், பல்முளேக்குங்காலத்தில் மெதுவாகத் தோன்றும் முதலில் சீரணக்கோளாறும் சரீரம் முழுவதும் வலியும் இருக்கும். ஆகவே, குழந்தை அசையாமல் படுத்திருக்கவே பிரியப்படும். அதை எடுப்பதற்கோ, தூக்குவதற்கோ பிரயத்தனப்பட்டால் அதற்கு மிகவும் உபத்திரவமாக இருக்கும். இரவுகளில் கொஞ்சமான சுரமும் அதிக அமைதியற்ற நிலேமையும் இருக்கும். தலேயிலும் கழுத்திலும் அதிக வியர்வை. அதிகமான பலவீனம், அசதி சிலநாட்கள் செல்ல நீண்ட எலும்புகளின் முனேகளிலும், விலா எலும்புகள் குறுத்தெலும்புகளுடன் சம்பந்தப்படும் இடங்களிலும்,மணிக்கட்டுகளிலும். கணுக்கால்களிலும் உள்ள எலும்புகள் பெரிதாகி நைந்துபோக ஆரம்பிக்கும். வியாதி விரைவினில் நிவர்த்திக்கப்படாவிட்டால் இப்பாகங்கள் சாசுவதமாக அவலக்ஷணமடையும். கால்கள் வில்போன்று வளேந்துவிடும். முதுகெலும்பு கோணலாகிவிடும். அல்லது பலக்குறைவால் குழந்தையே இறந்தும் விடலாம். ஆரம்பத்திலேயே சிகிச்சை செய்யப்பட்டால் இவ்வியாதி நிவர்த்திக்கக்கூடியதுதான்.

## ஒளஷத சிகிச்சை விபரம் :-

1. கல்கேரியாபாஸ் :- மெலிந்த குழந்தைகளுக்குப் போதிய சுண்ணும்புச் சத்து இல்லாததால் எலும்புகள் வளைதல், வெளுத்தமுகம், உச்சிக்குழி மூடப்படாமல் இருத்தல், தாமதமாகப் பல் முளைந்தல், இளைப்பு, தலையைத்தூக்க முடியாமை, முதுகெலும்பு வளைந்து கூன் விழுதல், கால் எலும்பு வில்போல் வளைதல், வயிற்றுப்போக்கு முதலிய குறிகள் தோன்றும்போது உபயோகமாகும்.

2. ஸிலிகா :- தலையைச்சுற்றி ஏராளமாய் வியர்வை, நாற்றமுள்ள வயிற்றுப்போக்கு, அடி வயிறு உப்பி சுரப்பிகளில் வீக்கம், தோள்பட்டை மூட்டுகள் நழுவி விடும்போல் பலவீனமாய் இருத்தல் முதலிய குறிகள் காணப்பட்டால் இம்மருந்து கொடுக்கப்படவேண்டும்.

3. கல்கேரியாகார்ப் :- தலையில் உச்சங்குழி மூடாது. எலும்புகள் சரியாக வளராது, முதுகெலும்பு வளைந்து கை கால்கள் வளைந்து இருக்கும். புளிப்பான வாந்தி, புளித்த தயிர் கட்டிகளாக வாந்தி. புளித்தபேதி, உடம்பும் புளிப்பு நாற்றமடிக்கும்.

4. பாஸ்பரஸ் :- ஒல்லியாய், உயரமாய் குறுகின மார்புடன் வளரும் குழந்தைகள். அசையவோ உட்காரவோ முடியாது வளைந்து நடக்கும்.



5. ஸல்பர் :- வயிறு சுளுன் வயிருகி அமைதியில்லாமல் இருக்கும். இரவில் உஷ்ண மிகுதியால் துணிகளை உதைத்துத் தள்ளிவிடும். வயிற்றில் பூச்சிகள் சிரங்குகள் வாரிக்கொட்டும். அல்லது ஒன்று வந்து ஆறினால் மற்றொன்று கிளம்பும்.

6. தூஜா :- இம்மருந்து அடிக்கடி அம்மை போடப் பட்டிருந்தால் சிறந்தது.

7. பாசில்லினம் :- குடும்பத்தில் ஆஸ்துமா, க்ஷயம் இருந்திருந்தால் மற்ற மருந்துகளுடன் வாரத்திற்கு ஒரு முறை உயர்ந்த வீரியத்தில் கொடுத்து வந்தால் நல்ல பலனளிக்கும்.

## துணை சிகிச்சை :

நல்ல சத்துள்ள ஆகாரங்களும், வைடமின் ஏ, டி இவை அதிகமாயுள்ள ஆகாரங்களும் உட்செலுத்தப்படவேண்டும். ஆகவே, இவ்வியாதிக்கு காட்லிவர் ஆயில் எனப்படும் மீன் எண்ணையை நீடித்து நாள்தோறும் கொடுத்துவருவது மிகவும் முக்கியமானது. நல்லகாற்று உள்ள இடங்களில் வசிப்பதும் சூரியவெளிச்சம் தினமும் உடம்பில் படும்படிச் சிறிது நேரமாவது இருப்பதும் அவசியம். ("ரிக்கெட்ஸ்" என்பதற்கு 'கணைச்சூடு' என்பது பொருத்தமான தமிழ் மொழியல்ல 'காட்லிவர்' எண்ணையைவிட 'ஷார்க்' சுறுமீன் எண்ணை உபயோகிக்கலாம் நிலக்கடலை எண்ணை சாலச் சிறந்தது.—Ed.)

---

## ஹோமியோ வைத்தியசாலை திறப்புவிழா.

9-11-59-ல் டாக்டர் J. E, கோயில்பிச்சை என்பவர்களால் தர்மநகரம் என்னும் ஊரில் "ஜோதி" வைத்திய நிலையம் திறக்கப்பட்டிருக்கிறது.

6-11-59 அன்று பிரமதேசத்தில் "பாக்கியதாய் டிஸ்பென்சரி" என்ற பெயரில் N. S. நவமணி என்பவர்களால் ஒரு வைத்தியசாலை திறக்கப்பட்டிருக்கிறது.

---

2—12—59 தேதியன்று R. K. செல்லமுத்து அவர்களால் "ஜெர்மன் ஆஸ்பத்திரியின்" கிளை ஒன்று கோவை ஆலாந்துறைரோட்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

---

### நீலகிரி ஜில்லா
### பதிவுபெற்ற ஹோமியோபதி டாக்டர்கள் சங்கம்
### நீலகிரி,

---

29—11—59 அன்று கூனூரில் இச்சங்கத்தின் கூட்டம் நடைபெற்றது, டாக்டர் குஞ்சர வைத்தியர் அவர்கள் தலைமை தாங்கினார்கள். டாக்டர் T.K. வர்மா அவர்கள் வைட்டமினும் ஹோமியோபதியும் என்பதைப்பற்றி பேசினார்கள்.

டாக்டர் H.B.. சுப்பையா அவர்கள் நன்றி கூறலுடன் கூட்டம் இனிது முடிந்தது.

---

### சீர்காழி தாலுக்கா
### பதிவுபெற்ற ஹோமியோ டாக்டர்கள் சங்கம் சீர்காழி.

---

28—11—59 அன்று தலைவர் ஸ்ரீ K. ரெங்கஸாமி அய்யங்கார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இந்த சங்கத்தின் கூட்டம் ஒவ்வொரு மாதமும் 15 தேதி நடத்த தீர்மானிக்கப்பட்டது.



## DIARRHOEA.

( Dr K. M. A. Wahab. )

(CONTD.)

### MEDICINES:

21. **Croton Tig:** Sudden evacuation; copious, watery stools, always forcibly coming out; flatulence; worse after drinking in the least and eating, even while eating. Watery, painless diarrhoea. Summer complaints of children.

22. **Dioscorea:** Diarrhoea with colicky pains, worse mornings

23. **Dulcamara:** Diarrhoea after exposure to wet, from damp cold weather; stools greenish or yellow, watery.

24. **Ferrum Met:** Painless, watery, some times undigested stools, always worse from eating and drinking. Diarrhoea accompanying phthisis and other exhausting diseases Chronic diarrhoea in anaemic subjects.

25. **Gelsemium:** Diarrhoea caused by bad or exciting news, from fright, or from the anticipation of some unusual ordeal.

26. **Hepar Sulphur**: Sour, greenish stools, or clay-coloured stools.

27. **Ignatia**: From fright or emotion. Alternate diarrhoea and constipation.

28 **Iodium**: Stools whitish, frothy, or fatty.

29. **Ipecac**: Stools greenish, frothy, with griping at naval.

30. **Iris Versicolor**: Frequent watery stools with burning at anus Stools painless, with rumbling.

31. **Kali Nit**: Diarrhoea from eating veal.

32. **Kali Phos**: Stools foul; depression and exhaustion; Diarrhoea after eating.

33. **Kreosotum**: Offensive, acrid stools; nausea and vomiting with diarrhoea.

34. **Magnesia Carb**: Stools green and frothy like the scum of a frog pond; always preceded by more or less colic, which is relieved by bending over. Especially diarrhoea of children.

35. **Mercurius**: Acid green mucous stools with colic and tenesmus. Green stools in teething children with colic and tenesmus. Bilious diarrhoea.



36. **Natrum Mur**: Summer diarrhoea of children, when their throat and neck emaciate rapidly.

37. **Natrum Phos**: Diarrhoea from acidity. Stools greenish.

38. **Natrum Sulph**: Yellow watery stools. Diarrhoea from damp weather and vegetable food Always worse in the morning after moving about.

39. **Nitric Acid**: Slimy, offensive stools.

40. **Nux Moschata**: Summer complaints of children with great sleepiness. Stools undigested like beaten eggs

41. **Nux Vomica**: Especially in the morning. Alternate diarrhoea and constipation.

42. **Petroleum**: Both acute and chronic. Diarrhoea only in the day time; stools watery, gushing, itching of anus, Diarrhoea from cabbage.

43. **Phosphoric Acid**: Stools white watery, painless, involuntary with emission of flatus Diarrhoea not debilitating. Both acute and chronic diarrhoea.

44. **Phosphorus**: Painless, copious, debilitating diarrhoea. Stools Involuntary seems as if the anus remained open. Stools contain undigested food or green mucus with grains like sago-chronic painless diarrhoea of undigested food-great weakness after stool.

45. **Podophyllum**: Especially useful in morning diarrhoea Diarrhoea of summer. Diarrhoea during teething. Stools sour, bilious, green, watery, fetid, profuse, gushing, painless, yellow, undigested, preceded by griping and colic. Prolapse of rectum before or with stool. Prolapse ani.

46. **Psorinum**: Stools watery, dark brown, mucous, bloody, extremely offensive.

47. **Pulsatilla**: Stools watery, bilious or green mucus. No two stools alike. Rumbling in the abdomen. Diarrhoea worse at night. Diarrhoea from fruits, rich food, from ice-cream, ice-water, from abuse of opium. Pain in the abdomen with stools.

48. **Rheum**: Especially in infants and teething children, thin, pasty, sour smelling stools, with straining before stool, shivering during stool, and colicky, cutting pain in the abdomen after stool; Not only the stools are sour, but the whole child smells sour, no matter how often washed.



223238

49. **Rhus Tox**: Stools dark brown or bloody mucus, tearing pain down thighs during stool, caused from getting wet.

50. **Rumex**: Early in the morning, driving out early in the morning, driving out of bed; stools brown and watery, attended with cough.

51. **Sanguinaria**: Diarrhoea after sudden stoppage of catarrh of the respiratory tract.

52. **Secale Cor**: Chronic diarrhoea with thin, olive green, offensive stools.

53. **Sepia**: Diarrhoea caused from drinking boiled milk, especially in teething children, stools whitish or brownish in colour.

54. **Sulphur**: Stools changeable, or undigested, Stools green, greenish yellow, slimy, bloody, excoriating. Parts become painful-Morning diarrhoea drives him out of bed. Chronic diarrhoea.

55. **Thuja**: Daily in the morning, after breakfast, stool bright yellow, watery, forcibly expelled, with much noisy flatus, at times painless, at times with colic. Rumbling in the abdomen.

56. **Veratrum Album**: Stools copious, watery, very painful and forcibly evacuated. diarrhoea suddenly at night, in summer.

## உங்கள் நோயாளிக்கு டானிக் தேவையா?

பலதரப்பட்ட நோயாளிகள் உங்களை தினம் சிறந்த டானிக் வேண்டுமென்று கேட்பார்கள்.

எங்கள் லாபரட்டரியில் தயாராகும் டானிக்குகள் அநேக விதமுள்ளன. பற்பல விதமான நோயாளிகளுக்கும் தேவையானவை. இவைகளில் ஏதாவது உங்களுக்கு அடிக்கடி தேவைப்படும். ஆகையால் இவைகளை ஸ்டாக் செய்து கொள்ளுங்கள்.

| | | |
|---|---|---|
| அல்பால்பா 'B' | போலிரம் | லாசோன் |
| பயோபாஸ்பேட்ஸ் | '5' பாஸ் | கிட்டி டிராப்ஸ் |
| பைனுலின் | விபக்ஸ் | மகரந்வஜா |
| ஹெபடோனின் | விகர்டாப்ஸ் | |
| ஹோமோகால்சின் | | |
| ஷார்க் ஆரஞ்சு | | |

### ஜெர்மோமைசின்:

புதுமையான புரட்சிகரமான ஹோமியோ மருந்து. மத்தியில் சிவப்புசீலிட்ட அழகான காப்ஸீல்கள். கடும்வியாதிகளுக்கு நீங்கள் நம்பகமாக உபயோகப்படுத்தவேண்டியது.

நீர்சுருக்கு, நீர்கடுப்பு, விஷசுரங்கள் நரம்புத்தளர்ச்சி, ஜன்னி முதலியவைகளுக்குச் சிறந்த மருந்து.

எட்டுகாப்ஸீல் கொண்ட ப்ளாஸ்டிக் டப்பா ரூ. 6.



### ஹோமோகால்சின்:

கால்சியம் போஷாக்குகளுக்கு சாக்லேட் ருசியுள்ள டானிக் க்ரானியுல்க்ஸ். புதுமையான மருந்து. சக்தி வாய்ந்த மருந்து.

கால்சியம் (சுண்ணும்பு) சத்து தேவையுள்ளவர்களுக்கு ஒருவேளை தினம்.

4 அவுன்ஸ் பாட்டிலில் ரூ. 3—62.

### அல்பால்பா B:

அல்பால்பா, நக்ஸ், அவனு, சைனு, அஸ்வகந்தா இவைகளுடன் இயற்கை வைடமின் B, C முதலியவைகள் சேர்க்கப்பட்டு தயாரிக்கப்பட்ட ருசியான, பொதுவான புஷ்டி தரும் டானிக்.

4 அவுன்ஸ் ரூ. 3—25.

### ஹெபடோனின்:

வீரியக்குறைவையும், முதுமையையும் மாற்றி, வலிமையூட்டும் சுரப்பிகளின் டானிக்.

30 வயதுக்கு மேற்பட்ட யாவரும் கைவசம் வைத்து சாப்பிடவேண்டியது.

4 அவுன்ஸ் ரூ. 4.

---

## ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள்.

**காபில்ஸிரப் :** ஆஸ்துமா ஸ்பெஷல் தயாரிப்பு.

**கார்டியாடோன் :** சிறந்த இருதயநோய் நிவாரணி.

**ஷார்க்ஆரஞ்சு :** அயம், கால்சியம், தாது உப்புக்களும், பழசத்துக்களும் சேர்ந்த வலிவூட்டும் டானிக்.

**எபடால் :** ஹோமியோபதி முறையிலேயே சிறந்ததொரு இருமலை நிவர்த்திக்கும் சிரப்.

**மேகிஸால் :** குன்மம், வயிற்றுவலி, நெஞ்சு எரிச்சல் இவைகளை குணப்படுத்தும் டானிக்.

---

## பெண்களுக்கு

**லாசோன் :** கருப்பாசய டானிக்.

**ஈஸ்ட்ரால் :** பெண் ஹார்மோன் சத்து.

**டெலிவரிசி :** சுகப்பிரசவ மருந்து (பாரதம் முழுவதும் பிரசித்திபெற்றது.)

**கிட்டிடிராப்ஸ் :** குழந்தை வளர்ச்சிக்கு சொட்டு டானிக்கு.

**பலன்சா :** மூலத்திற்கு.

**பாலாசவி :** குழந்தை ஈரல்குலை கட்டிகளுக்கு சிறந்த மருந்து.

---



கடைசிச் செய்தி.

☆

## அவசரக் குடுக்கையின் விபரீத பலன்.

---

நமது கூட்டணியில் சேராத ஒரு சங்கம் மதராஸில் இயங்குகிறது. அச்சங்கம் மதராஸ் சர்க்காருக்கு தாங்கள் ஒரு காலேஜ் திறக்க வேண்டுமென்றும், அந்த காலேஜிற்கு சர்க்கார் நிதியளிக்க வேண்டுமென்றும் கேட்டிருந்தது.

சுகாதார மந்திரி அவர்கள் அம்மாதிரி ஹோமியோபதி காலேஜ் திறப்பதற்குத் தற்பொழுது விருப்பமில்லை யென்றும் அத்துடன் மூன்று வருட அனுபவமுள்ள எல்லா ஹோமியோபதியர்களையும் சர்க்கார்பதிவு செய்யப்போவதில்லை யெனவும், பதிலளித்தார். மேலும் சர்க்கார் இவ்வைத்திய முறையை அங்கீகரித்து விட்டதென்றும், அதற்கான சட்ட திட்டங்கள் வைத்திய இலாகா டைரக்டர் அவர்களைக் கேட்டிருப்பதாகவும் கூறினர்.

கூட்டணியில் சேயாது இம்மாதிரி சிலசங்கங்கள் தனித் தனியே அவர்கள் இஷ்டப்படி இயங்குவதால் தான் அநேக சிக்கல்கள் உண்டாகின்றன. சாக்காரிடையேயும் குழப்பங்கள் ஏற்படுகின்றன. ஆகவே நாம் ஒரு முகமாக ஒன்றுகூடி சேர்ந்தாற்போல் ஐக்கியமான குரல் எழுப்பினுல் தான்

சர்க்காரிடையே நமக்கு வேண்டியவற்றை சாதித்துக் கொள்ளலாம். ஆகவே எல்லோருமாக இது ஒரு முக்கிய மான கட்டமாகக்கருதி ஒற்றுமை மனப்பான்மையுடன் ஓர் குரல் எழுப்ப, நமது பிரச்னைகளுக்கு வழிகாண, நமது குறைகளைத் தீர்த்துக்கொள்ள, சமுதாயத்தில் நமக்கு ஒரு நிலையான அந்தஸ்து தேடிக்கொள்ள ஹோமியோபதியர்கள் எல்லோரும் திரண்டு மதராஸிற்கு வாருங்கள்.

27—12—59 அன்று மதராஸிற்கு கட்டாயம் எல்லோரும் வரக்கோருகிறோம்.

☆

## நமது மதராஸ் பிராஞ்சு.

3 தம்புச்செட்டித் தெருவில் (ஹைகோர்டிற்கு நேர் எதிரில்) 1958-ஆம் மார்ச்சு மாதம் முதற்கொண்டு நமது இன்ஸ்டிட்யூட்டின் மருந்து விற்பனை இலாகா ஒன்று நிறுவப்பட்டிருக்கிறது

சென்னை, மற்றும் பக்கத்து ஊர்களிலிருந்தும் ஹோமியோபதி டாக்டர்கள் யாவருக்கும் சுலபமாக மருந்துகள் எல்லாவிதமும் கிடைக்கும்படி பெரும் அளவில் ஸ்டாக் செய்திருக்கிறோம்.

உங்கள் ஒத்துழைப்பிற்கு எங்கள் வணக்கம்.


## 'ஆர்னிகா' ஹேர் ஆயில்.

**'ஆர்னிகா'** சத்து கலந்த சிறந்த நறுமணமுள்ள வாசனைத் தைலம், தலைப்பொடுகு, மயிர் உதிர்தல் மயிர்க்காம்பு வியாதிகள், ஒற்றைத்தலைவலி, இவைகளை குணப்படுத்தும்.

4 அவு. பாட்டில் ரூ. 2—50

## 'காந்தரிடின்' ஹேர் ஆயில்.

**'காந்தரிஸ்'** சத்துடன் தயாரித்த நறுமணம் வீசும் ஹேர் ஆயில், தலைமயிர் உதிர்தல், வழுக்கை, பொடுகு முதலியவற்றை குணப்படுத்தும்.

4 அவு. பாட்டில் ரூ. 1-62

## மருக்கொழுந்து ஸ்நானத் தைலம்.

ஸ்நானத்திற்கு உகந்த நறுமணம் வீசும் தைலம் மூளைக்கும் கண்ணிற்கும் குளிர்ச்சி ஊட்டி, வெட்டைச் சூட்டைத் தனிக்கும் சிறந்த தைலம்.

2 அவு. ரூ. 0—60
5 அவு. ரூ. 1—25

**பெரிய சைஸ்களுக்கு தனியாக எழுதவும்.**

# சில ஸ்பெஷல் தயாரிப்புகள்.

## லாசோன்

(ஹோமியோபதி தயாரிப்பு)

சிறந்த கருப்பாசய டானிக், தாது உப்புக்கள், விபர்னம் அலெட்ரிஸ், லாசோன், அசோகா மற்றும் சில டிஞ்சர்கள் சேர்த்து ஹோமியோ முறையில் தயாரிக்கப்பட்டது.

எல்லாவிதமான ஸ்திரீகளின் வியாதிகளையும் சீக்கிரத்தில் குணப்படுத்தும்.

1 அவு. அல்லது 4 அவுன்ஸ் பாட்டில் ரூ. 3—0—0

223238

## பயோபாஸ்பேட்ஸ்

(ஸ்பெஷல் ஹோமியோபதி முறைப்படி செய்தது)

இதில் பெர்ரம், கால்சியம், கேலியம், மேக்னீஷியம், சோடியம், மேங்கனீஸ், சிங்க் முதலியவைகளின் பாஸ்பேட்டுகள் தகுந்த அளவில் கலக்கப்பட்டிருக்கின்றன.

சிறந்த ரத்த விருத்தி, நரம்பு பலப்படுத்தும் தாது உப்பு டானிக், இனிப்பானது. நவீனமானது.

6 அவுன்ஸ் பாட்டில் ரூ. 5—0—0

(ஆல்கஹால் கலவாதது)

# சில முக்கியமான மாத்திரைகள்.

**அல்பால்பா:** இயற்கை வைடமின் சத்துள்ளது. பல மூட்டும் டானிக்.

50 மாத்திரை பாட்டில் ரூ. 1—20

**போலிரம்:** இரும்பு வைடமின் சத்து நிறைந்தது. ரத்த கோளாருக்கு சிறந்தது.

100 மாத்திரை பாட்டில் ரூ. 2—00

**மகரத்வாஜா:** 3x தாதுபுஷ்டி, ரத்த சுத்தி, நரையிரனுக்கு பலமூட்டும் டானிக் (தங்கம் கலந்தது.)

100 மாத்திரை ரூ. 5 00

**பயோலாக்ஸ்:** நிகரற்ற மலமிளக்கி (பேதி மாத்திரை)

100 மாத்திரை ரூ. 2—37

## ஹார்மோன்கள்.

(தாது விருத்திக்கு நிகரற்றவை)

**டெஸ்டிரான்:** 3x (ஆண் தாது சத்து)

100 மாத்திரை ரூ. 2—25

**ஈஸ்டிரால்:** 3x (பெண் தாது சத்து)

100 மாத்திரை ரூ. 2—00

நம் மருந்துகள் இன்ஜெக்ஷன்கள். முதலியவை கீழ்க்கண்ட விளாசங்களில் எப்பொழுதும் கிடைக்கும்

(1) Dr. M. கோபாலகிருஷ்ணன்,
26, பாண்டிய வேளாளர் தெரு மதுரை.

(2) Dr. A. K. ஷம்சுத்தின்,
மாலிக் ஸ்டோர்ஸ்
மெயின் ரோடு, திண்டுக்கல்.

(3) Dr R. பாலுசாமி,
பாலு பார்மஸி,
ராசிபுரம் (P. O ) சேலம் Dt.

(4) Dr. V. மஹாதேவன்,
திருச்சி ஹோமியோ ஸ்டோர்ஸ்
12, சிங்காரத்தோப்பு திருச்சி 8.

(5) Dr. S. நாராயண அய்யங்கார்,
ஸ்ரீ லக்ஷ்மிஸ்டோர்ஸ்,
துறையூர்—(P. O.) திருச்சி Dt.

(6) D. S ஆபிரகாம் & கம்பெனி,
மருந்துஷாப் நாஸரத் P. O.
திருநெல்வேலி ஜில்லா & திருநெல்வேலி ஜங்ஷன்.

(7) Dr G. R. S. மூர்த்தி,
இந்தியன் மெடிக்கல் ஸ்டோர்ஸ்,
36, தெற்கு ரதவீதி, சிதம்பரம்.

(8) Dr. A. M. ராமலிங்கம்,
நனதா ஹோமியோ ஸ்டோர்ஸ்,
56, பிள்ளையார்கோவில் தெரு, புதுப்பேட்டை
குடியாத்தம்.

(9) Dr. A. Krishnasamy,
131, NAVALAR NORTH,
Five Junction Muslimward JAFFNA CEYLON.

(10) மதுரை ஹோமியோஸ்டோர்ஸ்,
மால்-4வது தெரு, மதுரை.

(11) Dr. M. B. குணவான்சிங் L. I. M.
சிங்க்டிரக்ஸ்டோர்ஸ், அரிசிபாளையம் சேலம் — 2.

Regd No ·M 6180

# -: ஹோமிசிலின் :-

நவீன விஞ்ஞான ஆராய்ச்சியின் பயனாக கண்டுபிடிக்கப்பட்டுள்ள 'ஹோமியோபதி' பெனிசிலின் போன்ற பவுடர் ரூபமுள்ள ஒரு மருந்து.

கடுமையான நீர் சுருக்கு, சிறு நீர்த்தாரையில் கனம், வெட்டை, கிரந்திப்புண்கள், சொறிசிரங்குகள், சீழ்பிடிக்கும் இரணங்கள், நாள்பட்ட சீழ். விஷசுரங்கள், விஷசுரங்களில் ஏற்படும் அதிசாரம், பிரசவ சன்னி, கருப்பைப்புண்கள், கடுமையான வலி, அக்கி, இன்புளுயன்சா, கடுமையான சுரங்கள் முதலியன குணமாகும்.

உள்ளுக்கும், இன்ஜெக்ஷனாகவும் உபயோகிக்கலாம்.

புதியமருந்து! புதுபாக்கிங்!

Edited and Published by: Dr. S. SRINIVASAN, Tiruvarur
and Printed by: Sri T. G. Narayanaswamy Pillai
Krishna (Power) Press, Tiruvarur.

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
சென்னை 600 008
நூலகம்

Regd No ·M 6180

# -: ஹோமிசிலின் :-

நவீன விஞ்ஞான ஆராய்ச்சியின் பயனாக கண்டுபிடிக்கப்பட்டுள்ள 'ஹோமியோபதி' பெனிசிலின் போன்ற பவுடர் ரூபமுள்ள ஒரு மருந்து.

கடுமையான நீர் சுருக்கு, சிறுநீர்த்தாரையில் கனம், வெட்டை, கிரந்திப்புண்கள், சொறிசிரங்குகள், சீழ்பிடிக்கும் இரணங்கள், நாள்பட்ட சீழ். விஷசுரங்கள், விஷசுரங்களில் ஏற்படும் அதிசாரம், பிரசவசன்னி, கருப்பைப்புண்கள், கடுமையானவலி, அக்கி, இன்புளுயன்சா, கடுமையான சுரங்கள் முதலியவை குணமாகும்.

உள்ளுக்கும், இன்ஜெக்ஷனாகவும் உபயோகிக்கலாம்.

புதியமருந்து! புதுபாக்கிங்!

Edited and Published by: Dr. S. Srinivasan, Tiruvarur
and Printed by: Sri T. G. Narayanaswamy Pillai
Krishna (Power) Press, Tiruvarur.

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
சென... 600 008
நூலகம்